2012 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை புறநகர் மாவட்டம், சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட, வாடிப்பட்டி பேரூராட்சி, 15 ஆம் வார்டுக்கு உட்பட்டதுதான் பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலையாகும். அதனை நிலக்கோட்டை தொகுதியில் உள்ளதாக நேற்று கேள்வி நேரத்தில் மாண்புமிகு நிலக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ராமசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலை சோழவந்தான் தொகுதிக்குட்பட்டதா, நிலக்கோட்டை தொகுதிக்குட்பட்டதா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நிலக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய தொகுதியில் வருவதாகச் சொல்லி, அங்கு சர்க்கரை ஆலை திறக்கப்படுமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். தற்போது மாண்புமிகு உறுப்பினர், அது அவர்களுடைய தொகுதியில் வருவதாகச் சொல்கின்றார்கள். அதனுடைய எல்லை எனக்குத் தெரியவில்லை. வேண்டுமென்றால் நாளையதினம் கேட்டு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அவர்களுக்கு பதிலளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

66—

அடிப்படை வசதிகள்

***16928—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை முருகன் கோயிலுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிடம் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதிக்குட்பட்ட விராலிமலை முருகன் கோயிலுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதன் அடிப்படையில், புதுக்கோட்டை மாவட்டத்தில், சுமார் ஆயிரம் முதல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மைவாய்ந்த சொர்ண விராலியம்பதி என்று அழைக்கப்பட்ட வள்ளி மற்றும் தெய்வானை சமேத சண்முகநாத திருக்கோயில் உள்ளது.

தேசியப் பறவையான மயிலுக்கு சரணாலயம் ஆகவும் அது இருந்து வருகிறது. ஆன்மீகச் சுற்றுலாப் பயணிகள் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் பாரம்பரிய நகரம், அதாவது Heritage town என்று நகர—ஊரமைப்புத் துறையால் அது அறிவிக்கப்பட்டுள்ளது.

விராலிமலை முருகன் கோயில் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு தங்குமிடம் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தருவது தொடர்பாக புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உரிய கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் பெற்று, இந்த நிதியாண்டில் அவ்விடத்தில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் மேற்கொள்ளப்படும் என்பதையும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் தொகுப்புச் சுற்றுலா அதாவது Package Tourism மூலமாக ஆன்மீகச் சுற்றுலா பயணிகள் கண்டுகளிக்க ஆவன செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

2012 ஏப்ரல் 10]

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சிக்கும், மேம்பாட்டுப் பணிகள் உடனே இந்த நிதியாண்டிலேயே மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அருணகிரிநாதருக்கு, அஷ்டமா சித்திகளை வழங்கிய ஆறுமுகங்களைக் கொண்ட 12 கைகளைக் கொண்ட முருகன், வள்ளி தெய்வானையோடு விராலிமலையிலே அற்புதமாகக் காட்சி அளித்தார். வருடம் முழுவதும் தைப் பூசம், மாசி மகம், பங்குனி உத்திரம், தெப்பத் திருவிழா, வைகாசி விசாகம், சூரசம்ஹாரம், பௌர்ணமி கிரிவலம் என பக்தர்கள் குவிந்துகொண்டிருக்கிற காரணத்தாலே மலைக்கு மேலே குடிநீர் வசதி, மலைக்குக் கீழே கழிவறை வசதி, தங்கும் இடம் கிரிவலப் பாதை அகலப்படுத்துதல் போன்ற மேம்பாட்டுப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்பதைக் கேட்டுக்கொண்டு நன்றி சொல்லி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி சுற்றுலாப் பணிகளுக்கு அடிப்படை வசதிகள் என்றாலே அங்கே ஓய்வு அறை, கழிவறை, குடிநீர் வசதி, தங்கும் இடம், அங்கே சிறுவர்கள் அதிகமாக வரக்கூடிய நிலை இருந்தால் அங்கே பூங்கா போன்ற அடிப்படை வசதிகள்தான் ஒவ்வொரு இடத்திலும் இதுவரை செய்து வரப்பட்டிருக்கின்றன. அதைப்போலவே, விராலிமலை சண்முகநாத முருகன் கோயிலிலும் இதேபோன்ற அடிப்படை வசதிகளும் அதற்குக் கீழே சுற்றி பாதை அமைக்கக்கூடிய பணிகளும் செய்யப்படும், அதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யும் என்பதையும் இந்த நிதியாண்டிலே அவை செய்து முடிக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் .*

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மன்னார்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வடூர் பறவைகள் சரணாலயம் உலகப் புகழ்பெற்ற சரணாலயமாகத் திகழ அனைத்து அம்சங்களும் அமைந்துள்ளது. இச்சரணாலயம் bird watching-க்கு மிகவும் உகந்த ஒரு சரணாலயம். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவ்விடத்தில் eco-tourism பாணியில் வளர்ச்சிப் பணிகளைத் துவங்கினால் அப்பகுதியில் வணிகமும் மென்மேலும் பெருகும் என்பதால், இந்தத் திட்டத்தை அமைச்சர் செயல்படுத்துவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டபடி இங்கே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த நிதியாண்டு ஒதுக்கீடிலேயே மன்னார்குடியிலுள்ள இராஜகோபாலசாமி கோயிலுக்கு சுற்றுலாத் துறை மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தப் பணிகள் தற்போது துவங்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார். அதைப்போலவே அவர் சொன்னதுபோல் eco-tourism அங்கே நிறுவப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறார் அந்தப் பணிகள் ஆய்வு செய்யப்பட்டு முறைப்படி அதற்கு வாய்ப்பிருந்தால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே சொல்லி, இங்கே mega-tourism என்ற வகையிலே குறிப்பாக, அந்தக் கிழக்குக் கடற்கரை சாலையிலே உள்ள அத்தனை மாவட்டங்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்காக, அதிக முக்கியத்துவம் வழங்கப்படும் சூழ்நிலை இருக்கின்றது என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மகாபாரதத்தில் ஒரு கதைக்குள் பல கதைகள் என்கிற மாதிரி, ஒரு கேள்வியில் இரண்டு விடைகள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

திரு. என்.டி வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் அமைந்திருக்கின்ற சென்னியாண்டவர் சிரகிரிவேலவர் திருக்கோயில் ஈரோடு மாவட்டத்திலேயே சிறப்பு வாய்ந்த திருக்கோயிலாகும்.

2012 ஏப்ரல் 10]

பல்லாயிரக்கணக்கான மக்கள் வழிபடக்கூடிய மிகவும் புகழ்பெற்ற திருக்கோயில். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அனைத்து கோயில்களுக்கும் இன்றைக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த வேளையிலே இந்தத் திருக்கோயிலுக்கும் கோடிக்கணக்கான ரூபாய் செலவிலே இன்றைக்கு திருப்பணிகள் நடைபெற்று கும்பாபிஷேகம் இன்னும் ஒரு வருட காலத்திலே நடைபெறக்கூடிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்றது. புரட்சித் தலைவர் காலத்திலே, இந்தக் கோயிலில் உள்ள 1,100 படிகள் மேலே மாட்டு வண்டி மலையேறிய தமிழகத்தின் கவனத்தை ஈர்க்கக்கூடிய அப்படிப்பட்ட அதிசயமெல்லாம் இந்தக் கோயிலிலே நடந்தது. அப்படிப்பட்ட புகழ்பெற்ற இந்தத் திருக்கோயிலுக்கு அந்தக் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்குள், அந்த மலைக்குச் செல்கின்ற சாலை மிகவும் பழுதடைந்திருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வெங்கடாச்சலம், கேள்விக்கு வாருங்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *ஆகவே, அந்தச் சாலையைச் செப்பனிட துறையினுடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கையின் அடிப்படையில் சுற்றுலாத் துறை மூலமாக சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லக்கூடிய* approach road *பழுதடைந்திருந்தால் அதைச் சீரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனையில் எடுத்து, மாவட்ட ஆட்சியரிடம் திட்ட மதிப்பீடும், கருத்துருவும் பெற்று அதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, பொன்னேரி தொகுதியில் சிறுவாபுரி முருகன் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற கோயிலாகும். இக்கோயிலுக்கு செவ்வாய் மற்றும் கிருத்திகை, பௌர்ணமி நாட்களில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வந்து செல்வதால், அந்தக் கோயிலுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளும் மற்றும் பயணிகள் தங்கிச் செல்வதற்கு ஒரு கட்டடமும் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே, சமராபுரி என்று சொல்லக்கூடிய திருச்செந்தூரில் உள்ள முருகன் கோயிலை போல, சிறுவாபுரி என்ற இடத்தில் ஒரு பிரசித்தி பெற்ற முருகன் கோயில், பொன்னேரி தொகுதியிலே இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, அங்கே அதிகமாக பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் சென்று வருகின்றார்கள். ஆகவே, அவருடைய இந்தக் கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலனைக்கு எடுத்து, இந்த நிதியாண்டிலேயே, சுற்றுலாப் பயணிகளும், பக்தர்களும் வந்து செல்லக்கூடிய வகையில், அடிப்படை வசதிகளைச் செய்ய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

67—

பேருந்துப் பணிமனை

***6199—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—